**மாத்தறை பல்கலைக்கழக கல்லூரி – 2016**

---

தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் மாத்தறை பல்கலைக்கழக் கல்லூரிக்குரிய 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2008 இன் 31 ஆம் இலக்கத் தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 47(2) ஆம் பிரிவு மற்றும் 2014 ஒக்டோபர் 03 ஆந் திகதிய 1882/51 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியின் 17(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 49(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகக் கல்லூரியின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். என்னால் உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கல்லூரியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கல்லூரியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை, மாத்தறை பல்கலைக்கழக கல்லூரியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மாத்தறை பிரதேச செயலாளரால் 2013 நவம்பர் 27 ஆந் திகதி இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சிற்கு கையளிக்கப்பட்ட 0.5854 ஹெக்டெயர் காணி மற்றும் அமைச்சால் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத் தொகுதி என்பவற்றின் பெறுமதி என்பன மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

04 பாடங்களுக்காக வெளிவாரி விரிவுரையாளர்களின் 95 விரிவுரை மணித்தியாலங்களுக்காகச் செலுத்தப்பட்ட ரூபா 95,250 தொகையான விரிவுரைக் கட்டணங்களின் சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அந்த விரிவுரைகளுக்கு சமூகமளித்த மாணவர்களின் பெயர்ப்பட்டியல் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 103 மற்றும் 104 | 2016 மே 15 மற்றும் 2016 ஒக்தோபர் 17 என்ற தினங்களில் நிறுவனத்திற்குச் சொந்தமான 02 வாகனங்கள் விபத்திற்கு உட்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக தொடர்புடைய நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 756 | மீளாய்வாண்டிற்கான நிறுவனத்தின் 08 பிரிவுகளுக்குரிய வருடாந்தப் பொருள் மெய்மையாய்வு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/2 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | ரூபா 13,978,278 கிரயமுடைய கணனிகள் மென் பொருள் மற்றும் துணைப்பாகங்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பல்கலைக்கழக கல்லூரியின் நிதி விளைவுகள் ரூபா 2,223,799 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 1,054,346 ஆனமையால் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவில் ரூபா 3,278,145 அதிகரிப்பொன்றைக் காண்பித்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 7,069,499 இனால் சேவைச் செலவினங்கள் அதிகரித்திருந்த போதிலும், மீண்டெழும் மானியம் ரூபா 15,917,725 இனால் அதிகரித்தமை மேற்கூறப்பட்ட அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது முன்னைய ஆண்டில் பற்றாக்குறையாக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது மிகையொன்று ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கவனத்தில் கொள்ளும் போது முன்னைய ஆண்டில் ரூபா 35,749,407 தொகையான பங்களிப்பு 32 சதவீதத்தால் அதிகரித்து மீளாய்வாண்டின் போது ரூபா 47,013,252 ஆக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழக அதிகாரச்சட்டம் மற்றும் பல்கரைக்கழக கல்லூரியின் நெறிமுறைகளில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த நோக்கங்களின் சுருக்கம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) தேசிய தொழில் தகைமைகள் (NVQ) 5 மற்றும் 6 (டிப்ளோமா/ உயர் டிப்ளோமா) மட்டங்களுக்காக மாணவர்கள் ஈடுபடுத்துவதற்குரிய வளங்களை உச்ச அளவில் வழங்குதல்

(ஆ) பல்கலைக்கழக கல்லூரியின் மனித மற்றும் பௌதீக வளங்களின் அபிவிருத்தி, டிப்ளோமா மற்றும் உயர் டிப்ளோமாக இற்கான தரத்தன்மை முறைமையை தராதரப்படுத்துதல்.

(இ) மனிதவளப் பயிற்சி மற்றும் அபிவிருத்தியின் மூலம் டிப்ளோமா மற்றும் உயர் டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டங்களின் தரத் தன்மையைப் பேணிச் செல்லல்.

(ஈ) பல்வேறு தரப்பினர்களுடன் சிறந்த தொடர்புகளைப் பேணுவதன் மூலம் சமூதாய பின்புலம் மற்றும் நிலைமைகளைப் பேணுவதனூடாக பல்கலைக்கழகக் கல்லூரி தொழில்சார் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி வழங்குகின்ற முதன்மை நிறுவனமாக பேணிச் செல்லல்.

(உ) பல்கலைக்கழக கல்லூரியின் மாணவர்களினதும் பதவியணியினர்களினதும் புறச் செயற்பாடுகள், நலன்புரி மற்றும் ஊக்குவிப்புச் செயற்பாடுகளை பேணிச் செல்லல்.

மேற்கூறப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிறுவனத்தின் பல்வேறு பிரிவுகளுக்குமான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், போதியளவான கட்டிட வசதிகள் இல்லாமையின் அடிப்படையில் அவற்றை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

(ii) ஒவ்வொரு பாடநெறிக்காகவும் ஆகக்கூடியது 30 மாணவர்கள் சேர்க்கக் கூடியதாக இருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது 09 பாடநெறிகளுக்காக 06 முதல் 27 மாணவர்கள் வரையிலான அளவில் மாத்திரம் சேர்க்கப்பட்டிருந்தனர்.

(iii) குளிரூட்டி மற்றும் வளிப் பதனாக்கி தொழில்நுட்பம் மற்றும் அழகுசாதன முகாமைத்துவம் (Cosmetology Management) என்ற பாடநெறிகளுக்காக முறையே 2 வருடங்களுக்காக 14 மாணவர்களும் மற்றும் 09 மாணவர்களும் சேர்க்கப்பட்டிருந்தமையின் காரணமாக மீளாய்வாண்டின் போது அந்தப் பாடநெறிகளில் ஒரு மாணவரின் கிரயம் முறையே ரூபா 698,482 மற்றும் ரூபா 562,447 என்ற உயர் பெறுமதியைக் கொண்டிருந்தது.

(iv) அடிப்படைப் பாடநெறிக்காக நியமிக்கப்பட்ட 10 வெளிவாரி விரிவுரையாளர்களின் நியமனக் கடிதங்களின் பிரகாரம் 10 பாடங்களுக்காக மேவுகை செய்யக்கூடிய பாடவிதானம் மற்றும் பிரயோக விரிவுரை மணித்தியாலங்களில் 284 மற்றும் 372 அளவில் முறையே 25 மற்றும் 104 விரிவுரை மணித்தியாலங்கள் மேவுகை செய்யப்படவில்லை.

(v) இரண்டாம் ஆறு மாதங்களுக்காக நியமிக்கப்பட்ட விரிவுரையாளர்களின் நியமனக் கடிதத்தின் பிரகாரம் 22 பாடங்களுக்காக மேவுகை செய்யக்கூடிய பாடவிதானம் மற்றும் பிரயோக விரிவுரை மணித்தியாலங்கள் முறையே 1062 மற்றும் 733 அளவில் முறையே 503 மணித்தியாலங்கள் மற்றும் 609 மணித்தியாலங்கள் மேவுகை செய்யப்பட்டிருக்கவில்லை. இந்த நிலைமையினால் அப்பாடநெறிகளின் தரத்தன்மை குறைவடைவதற்கு காரணமாக இருந்தது.

**4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்**
------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேவைகள் உரிய பிரகாரம் இனங்காணப்படாமல் மீளாய்வாண்டின் போது ரூபா 416,124 தொகையான முற்பணம் செலுத்தப்பட்டமையின் காரணமாக முற்பணத் தொகையிலிருந்து 41 சதவீதம் அதாவது ரூபா 172,456 மீண்டும் பணமாகத் தீர்க்கப்பட்டிருந்தது.

(ஆ) 2015 பெப்ரவரி 16 ஆந் திகதி வரையில் அமைச்சினால் கல்லூரிக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 14,525,000 கிரயமான இரண்டு வாகனங்களின் உரித்தை நிறுவனத்தின் பெயரில் கையேற்பதற்கு 2017 ஏப்ரல் 25 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 யூன் 30 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய ஆதனவரித் தொகை ரூபா 7,746 ஆக இருந்ததாக மாத்தறை மாநகர சபையால் அறிவிக்கப்பட்டிருந்ததுடன் நிலுவைப் பணத்தை தீர்வு செய்து உணவுத் திணைக்களத்தின் பெயரில் காணப்படுகின்ற ஆதனங்களை நிறுவனத்தின் பெயரில் மாற்றிக் கொள்வதற்கு 2017 மே 18 ஆந் திகதி வரையும் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அந்த நிலுவை ஆதனவரிக்காக நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல், வாங்கல்கள்

2014 பெப்ரவரி 10 ஆந் திகதிய DMS/1670 ஆம் இலக்க கடிதத்தின் அறிவுரைகளுக்கு முரணாக கட்டம் 5 மற்றும் கட்டம் 6 இற்காக வெளிவாரி விரிவுரைக் கட்டணம் மணித்தியாலமொன்றிற்காக செலுத்த வேண்டிய தொகை அங்கீகரித்துக் கொள்ளப்படாமல் கட்டம் 7 இற்காக அங்கீகரிக்கப்பட்ட தொகையை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### 4.4 பதவியணியினர் நிர்வாகம்

மீளாய்வாண்டின் இறுதியில் கல்விசார் பதவியணியினரில் 08 விரிவுரையாளர் பதவிகளும், தற்காலிக காட்சிப்படுத்துனர் மற்றும் விரிவுரையாளர் போன்ற பதவிகளில் ஒரு வெற்றிடம் வீதமும், கல்விசாரா பதவியணியினர் வெற்றிடங்களில் 2 பதவிகளும் காணப்பட்ட போதிலும், அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டின் போது உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

### 5.2 கணக்காய்வுக் குழு

2010 திசெம்பர் 14 ஆந் திகதிய பீஈடீ/55 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுவனத்தினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு உருவாக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 02 சதவீதம் முதல் 653 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 5.4 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்

பல்கலைக்கழக கல்லூரிகளில் தற்போது பண அறவீடின்றி பாடநெறிகள் நடாத்தப்பட்டிருந்த போதிலும், 2015 ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்ட முதலாவது மாணவர் குழுவிடமிருந்து அறவிடப்பட்டிருந்த ரூபா 1,227,000 தொகையான பாடநெறிக் கட்டணம் அமைச்சிற்கு அனுப்பப்பட்டதன் பின்னர் நிதி தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய எதிர்கால நடவடிக்கைகள் எத்தகையது என 2016 ஏப்ரல் 28 ஆந் திகதிய கடிதம் மூலம் வினவப்பட்டிருந்த போதிலும், 2017 மே 31 ஆந் திகதி வரையிலும் அதற்குதிய பதில் கிடைத்திருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது கல்லூரியின் பணிப்பாளரது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | | அவதானிப்பு | |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | காணி மற்றும் கட்டிடத் தொகுதியின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படாமை. | |
| (ஆ) | நிலையான சொத்துக் கட்டுப்பாடு | (i) | கணனி, மென்பொருள் மற்றும் வன்பொருள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடொன்று தயாரிக்கப்படாமை |
| | | (ii) | இரண்டு வாகனங்கள் நிறுவனத்தின் பெயருக்கு கையேற்கப்படாமை மற்றும் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்படாமை |
| (இ) | நிதிக் கட்டுப்பாடு | தேவைக்கு மேலதிகமாக முற்பணம் வழங்கயமை மற்றும் தாமதமின்றி தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை | |
| (ஈ) | பதவியணியினர் நிர்வாகம் | (i) | கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியினர்களின் வெற்றிடங்கள் நிரப்பப்படாமை |
| | | (ii) | நியமனக் கடிதம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை. |
| (உ) | வாகனக் கட்டுப்பாடு | (i) | வாகன விபத்து தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை |
| | | (ii) | வாகன ஓட்டக் குறிப்பு மற்றும் சம்ளத்திரட்டுப் புத்தகம் பூரணப்படுத்தப்படாது காணப்பட்டமை |
| | | (iii) | எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்படாமை |
| (ஊ) | செயற்பாட்டுக் கட்டுப்பாடு | 7 வெளிவாரி விரிவுரையாளர்களின் தகைமைகள் தொடர்பாக உறுதிப்படுத்தப்படாமை | |